**தலைப்பு 275 – பொலன்னருவ மாவட்ட செயலகம்**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 275 - பொலன்னருவ மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொலன்னருவ மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது.கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொலன்னருவ மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் எனது கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) பதுளை மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் பரீட்சை மீதியின் பிரகாரம் காசு பாய்ச்சல் கூற்றில் தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் தொழிற்பாட்டு செலவினங்களுக்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 611.96 மில்லியன் ஆக இருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 579.13 மில்லியனாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததால் தொழிப்பாட்டு செலவினங்களில் இருந்து உருவான காசு பாய்ச்சல் ரூபா 32.83 மில்லியன் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மாவட்ட செயலகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் இருந்ததாக | 2023 நவம்பர் 30 ஆம் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுகளின் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 2,888 மில்லியன் ஆக இருந்த போதும் 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்களில் ஆரம்ப மீதி ரூபா 2,805 மில்லியன் என கணக்கீடு செய்யப்பட்டதால் 2023 ஆம் ஆண்டின் நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா 83 மில்லியன் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வெளிக்கந்த பிரதேச செயலகத்தின் நிதி அல்லா சொத்துக்கள் மீதி ரூபா 83 மில்லியன் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை எதிர்காலத்தில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் இறுதி மீதிகளுடன் ஒப்பீடு செய்து தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 111.35 மில்லியன் பெறுமதியான (காப்புறுதிக்கான மதிப்பீடு செய்யப்பட்ட) 40 வாகனங்கள் மற்றும் மேலும் 8 வாகனங்களின் பெறுமதி மற்றும் 52 உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாமல் இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் போது பொருள் மெய்மையாய்வு மூலம் இனங்காணப்பட்ட கையகற்றப்பட வேண்டிய பொருட்கள் 2023 ஆம் ஆண்டில் கைதவிர்க்கப்பட்டிருந்த போதும் அந்த கை தவிர்ப்பு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி இனங் காணப்பட்டு நிதி அல்லா சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | 2023 நவம்பர் 30 ஆம் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 8.1 மற்றும் 8.2 பந்தியின் பிரகாரம் அனைத்து சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (இ) | **புத்தகங்கள், பதிவேடுகள் பேணிச் செல்லாமை** | | |
| | 2023 நவம்பர் 30 ஆம் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 8.1 மற்றும் 8.2 பந்தியின் பிரகாரம் அனைத்து அனைத்து சொத்துக்கள் பதிவேட்டில் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி கை தவிர்ப்பு செய்யப்பட்டிருந்தால் அது தொடர்பான தகவல்கள், சொத்துக்கள் பரிமாற்றம் தொடர்பான தகவல்கள் சொத்து கொள்வனவு தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | CIGAS நிகழ்ச்சியில் கொள்வனவு செய்யப்பட்ட திகதி பதிவாவதுடன் நிலையான சொத்து கைதவிர்ப்பு மற்றும் அதன் விபரங்கள் நாளவது வகையாக மேற்கொள்ளபடாததால் அதனை எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக | CIGAS நிகழ்ச்சியில் நிலையான சொத்துக்களின் மொடியுல் மூலம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளாவது வரையாக பேணப்பட வேண்டும் |

**(ஈ) கணக்காய்விற்கு சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 02 கணக்காய்வு விசாரணைகளுக்கு 2024 மே 31 ஆம் திகதி வரையிலும் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த விசாரணைகளுக்குரிய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 203.6 மில்லியன் ஆக இருந்தது. | பதிலை விரைவில் வழங்குவதற்கு அனைத்து பிரிவுகள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது . | நிதி பிரமாணம் 155 பிரகாரம் கணக்கு உத்தியோகத்தியோகத்தரால் கிடைக்கப் பெற்றுள்ள கணக்காய்வு விசாரணைகளில் இருந்து சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடு களை சீராக்கவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய துடன் அவர் விசாரணை களுக்கு உடனடியாக பதிலளிக்க வேண்டும் அவ் பதில் வழங்குவது தாமதமாகி இருக்கும் விசாரணைகளுக்கு அதற்காக இடைக்கால அறிக்கையொன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 66 மாற்றலின் கீழ் 07 செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 2.8 மில்லியன் செலவிடப்படாமல் நூறு சதவீதமும் மீளாய்வாண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்ததுடன் வேறு 4 செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்ட ரூபா 5.2 மில்லியன் நிதி ஏற்பாடுகளில் மொத்தம் 3.7 மில்லியன் அதாவது ஒவ்வொரு செலவின விடயத்தின் கீழ் 60 சதவீதம் முதல் 97 சதவீதத்துக்கு இடைப்பட்ட வீச்சிலான சதவீதம் ஒன்று சேமிக்கப்பட்டு இருந்ததுடன் 02 செலவின விடயங்களில் நிதி ஏற்பாடு நிதி பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களில் மாற்றப்பட்ட போதும் பின்னர் முறையே 52 சதவீதம் 95 சதவீதத்திற்கு அளவில் சேம்கிகப்பட்டிருந்தது. | எதிர்பாரத்ததன் பிரகாரம் செலவிடுவதற்காக கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக | பாதீட்டு மதிப்பீட்டை நிதி முகாமைத்துவ வழிகாட்டலாக பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | புதிய மாவட்ட செயலக கட்டிடத்தில் ஆரம்ப திட்டத்தில் பிரதான அம்சம் ஒன்றான சூரிய சக்தி முறைமை நிர்மாணிக்கப்படாமையால் மாதாந்த மின் பயன்பாட்டிற்காக ரூபா 01 மில்லியனுக்கும் ரூபா 02 மில்லியனுக்கும் இடைப்பட்ட அதிகளவிலான செலவினமொன்றை மேற்கொள்ள நேர்ந்திருந்தது. | சூரிய சக்தி முறைமையை பொருத்தி மின் வளங்களை பெற்றுக் கொள்வதற்கு நிலைபேன் தகு வலு அதிகார சபை தவறி இருந்ததால் 2024 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 66 மில்லியன் அந்த சூரிய சக்தி முறைமையை பொருத்துவதற்கு பயன்படுத்தி உள்ளதாக | ஆரம்ப திட்டத்தில் முக்கிய பிரிவொன்றான சூரிய சக்தி முறைமையை பொருத்துதல் கட்டிட நிர்மாண பூர்த்தி செய்வதற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட வேண்டும். |

## 2.1 செலவின முகாமைத்துவம்

## 2.2 வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 சிறுபோகம் 2023 பெரும் போகங்களில் சுற்றாடலுக்கு சாதகமான உரப் பங்களிப்பு நிகழ்ச்சி திட்டத்தை செயற்படுத்தும் போது விவசாயிகளுக்கு சேதன பசளை வழங்கும் போது பரிந்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் பயன்படுத்தக் கூடியதாக உரங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2022 சிறு போகத்தின் போது ரூபா 298.1 மில்லியன் மற்றும் 2023 பெரும் போகத்தின் போது ரூபா 681.4 மில்லியன் பெறுமதியான சேதன பசளை பரிந்துரைக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு இணங்க வழங்கப்படாமல் இருந்ததுடன் புலஸ்திகம கமநல சேவை அதிகார பிரதேசத்தில் 211 விவசாயிகளுக்கு 2022 சிறு போகத்தின் போதும் 2023 பெரும் போகத்தின் போதும் பகிர்ந்தளிக்கப்பட்டு இருந்த ரூபா 9.5 மில்லியன் பெறுமதியான சேதன பசளைகள் விவசாயிகளால் எடுத்துச் செல்வதை நிராகரிக்கப்பட்டதன் காரணமாக அழிவடைந்து காணப்பட்டன. | உர விநியோகம் பயிர்ச்செய்கை விரிவாக்கப்பட்ட திகதியுடன் அண்மித்ததாக இடம் பெற்றதா | நிகழ்ச்சிகளை செயற்படுத்தும் போது பொருளாதார செயற்திறன் மற்றும் ஆக்கபூர்வமான முறையில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் செயற்படுத்தப்பட வேண்டும் |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் அவதானிக்க்பபட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் க)ழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | II ஆம் தொகுதியனள்மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் வநியோகிக்கப்பட்ட 2020/06 சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | 300,000<br>- | இப்பந்திகளின் ஏற்பபார்டுகளுக்கு முரணாக சமூர்த்தி நிதியம் 03 வங்கிகளில் ரூபா 100,000 வீதம் மொத்தம் ரூபா 300,000 ஆன கடன் தொகையொன்று மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர் பதவியில் மேவுகை செய்யும் மேலதிக மாவட்ட செயலாளரால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது | பதில் எதிர்காலத்தில் வழங்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு புறம்பாக கொடுப்பனவுகள் மேற்கொள்ள கூடாது. |
| (ஆ) | 2004 மே 11 ஆந் திகதி 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுறறிக்கையின் 4.4 ஆம் பந்தி | | மாவட்ட செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்களில் இச்சுற்றறிக்கையின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் சமளம் தயாரிக்கும் மென்பொருள் கடவுச் சொல் 03 மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்பட்ட போதும் பழைய கடவுச் சொல் மூலம் முறையில் உட்செல்ல முடியுமாக இருந்ததாக | முறைமையில் பலவீனம் எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறைமையில் பலவீனம் சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2009 மே 06 ஆந் திகதி 1600/18 ஆம் இலக்கம் மற்றும் 2021 பெப்ரவரி 25 ஆந் திகதிய 2216/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | அரசின் காணிகளில் கணியப் பொருள் அகற்றுதல் பண சேகரிப்பாக 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 139.55 மில்லியன் தொகை பொலன்னருவ மாவட்டத்தின் 04 பிரதேச செயலகளில் பேணிச் சென்ற அனுமதிப்பத்திரங்களை கருங்கள் 41 வேலைத்தளங்களிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லைல். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவை கணிய வள கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.4 மோசடியான தன்மையிலான கொடுக்கல் வாங்கலகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 சிறு போகத்தின் போது பொலன்னருவ மாவட்ட செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர் ஊடாக விவசாயிகளிடந்து நெல்லை கொள்வனவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்பினை அரிசியாக்கி மீண்டும் அரசுக்கு கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் போது திம்புலாக்கல, தம்மன்கடுவ, லங்காபுர, எலஹர மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலகங்கள் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட நெல்லுக்காக 2021 ஜுலை 22 ஆந் திகதிய DFD/Paddy/2021-3 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கையின் 7(1) பிரிவின் பிரகாரம் ரூபா 215 மில்லியன் பெறுமதியான 2.18 மில்லியன் கிலோகிராம் அரிசியை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு | நாட்டில் காணப்பட்ட பொருளாதார சிக்கல் நிலைமை காரணமாக நெல் குற்றுதல், உடன்படிக்கை செய்யப்பட்ட விலைக்கு முடியாதென ஆலய உரிமையாளர்களால் குறிப்பிட்டு இருந்ததுடன் எவ்வாறாயினும் நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்து நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | நெல் ஆலை உரிமையாளர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ஆ) | 2021 சிறு போகத்தின் போது சிறு போகத்தின் போது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 19 ஆலை உரிமையாளர்கள் ஊடாக 294 விவசாயிகளிடம் நெல்லை பெற்றுக் கொள்ளாமல், நெல் பெற்றுக் கொண்டதாக மேற்பாவை நடவடிக்கை செய்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் குறித்த படிவம் தயாரிக்கப்பட்டு நெல்லுக்காக ரூபா 87.46 மில்லியன் மற்றும் பொதியிடும் உரைகள் மற்றும் தையல் கூலியாக ரூபா 7.68 மில்லியன் 05 பிரதேச செயலகங்கள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களால் மோசடியாத செயற்பாடு மேற்கொள்ளப்படவில்லை எனவும் விவசாயிகளுக்கு போலியான பணம் கொடுக்கப்படவில்லை என்பதாகவும் அறிவித்துள்ளதுடன் இது தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்றை நடத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு ஒழுங்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் |
| (இ) | திம்புலாக்கல பிரதேச செயலகத்தின் 2018 ஜூன் 11 ஆம் திகதி முதல் 2021 மே வரையான காலப் பகுதியில் முதியோர் படிகள் மற்றும் சிறுநீரக படிகள் கொடுப்பனவின் போது இடம்பெற்றிருந்த ரூபா 2.44 மில்லியன் ஆன நிதி மோசடி உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் இது தொடர்பாக குறித்த உத்தியோகத்திற்கு எதிராக ஆரம்ப பரிசோதனைகள் பரிசோதனையின் பின்னர் முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன் குறித்த மேற்பார்வை உத்தியோகத்திற்கு எதிராக எந்த ஒரு ஆரம்ப பரிசோதனை அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப பரிசோதனை அறிக்கை மற்றும் குற்றப் பத்திரிகையின் வரைவு ஒன்றிணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அறிவித்து அனுப்பி வைக்கப்படாது இருந்ததுடன் இந்த உத்தியோகத்தரின் வேலை இடைநிறுத்துமாறு கோரி பொது நிர்வாக உள்நாட்டு அலுவலர்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சரிடம் ஆலோசனை கோரி உள்ளதாக அறியத் தருகிறேன் | குறித்த உத்தியோகத்தர் மற்றும் மேற்பார்வையாளர் உத்தியோகத்தரிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது வைப்பு மீதிகள் கால பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 65.93 மில்லியன் பெறுமதியான வைப்புக்கள் 5 ஆண்டுகளை கடந்திருந்த மற்றும் ரூபா 56.81 மில்லியன் பெறுமதியான வைப்புகள் 02 ஆண்டுகளை மிகைத்திருந்தன. | வைப்புக்கள் தொடர்பாக அவ்வப்போது நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக | காலாவாதியான வைப்புக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்படும் பிரதேச செயலகங்களால் 2023 - 2026 வரையான ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் தகவல் உள்ளடக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம்: செயற்பாடு களை நிறைவேற்றுதல் வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த நலன்களை (Outcome) பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டில் கிடைத்த நிதி ஏற்பாட்டின் பேரில் ரூபா 10.90 மில்லியன் ஆன உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியோடு ஹிங்குரக்கொட மின்சார வேலியை அண்மித்த 16 காவலர் கூடங்களை நிர்மாணிக்கும் செயற் திட்டத்திற்காக ரூபா 1.81 | செயலாற்றல் பாதுகாப்பின் மூலம் அறவிடுவதற்கு சிரமமான பணத்தை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்வதற்கு உள்ள பட்டியல்களில் இருந்தும் அவரால் மேற்கொள்ளப்பட்டுள்ள வேறு செயற் திட்டங்களின் நிறுத்தி | அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் செலவிடப்பட்டு செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்ட காரணத்தினால் அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை குறைப்பதற்காக ரூபா 845,137 ஆன செயலாற்றல் பாதுகாப்பினை மாவட்ட செயலகத்திற்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைத்தல் தொகையில் இருந்தும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து கிடைத்த நிதி ஏற்பாட்டின் பேரில் 2020 செப்டம்பர் 15 ஆம் திகதி முதல் 2021 நவம்பர் 7 ஆம் திகதி வரை எலஹர பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் மின்சார வேலியை அண்தமித்து 12 காவலர் கூடங்களை நிர்மாணிக்கம் செயற்திட்டத்தை செயற்படுத்து வதற்காக ரூபா 8.99 மில்லியன் பெறுமதியான ஒப்பந்த பெறுமதிக்கு ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 2.64 மில்லியன் தொகை பின்னர் செயற்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டு இருந்தது. அதற்குரிய செயலாற்றல் பாதுகாப்பு மூலம் அரசுக்கு இடம் பெற்ற நட்டத்தை அறவிடுவதற்காக பொறுப்பான உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் பாதுகாப்பு பிணையை இதை நாளாக வரையாக்க முடியாதிருந்ததாக | அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து கிடைத்த நிதி ஏற்பாட்டின் பேரில் திம்புலாக்கல பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் மின்சார வேலியை அண்தமித்து 13 காவலர் கூடங்களை நிர்மாணிக்கம் செயற்திட்டத்திற்காக 2020 செப்டம்பர் 18 முதல் 2020 திசெம்பர் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு ரூபா 9.69 மில்லியனுக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு செயற்திட்டத்தின் பூர்த்தி செய்யும் காலம் 2023 ஜனவரி 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது மீளாய் வாண்டின் இறுதி வரையில் ரூபா 5.05 ஆனா செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதன் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை | செய்யப்பட்ட வேலைக்காக பட்டியல் சமர்ப்பித்தல் தாமதமாக உள்ளதாகவும் கொடுப்பனவு கோவிட் தொற்று காரணமாக செயற் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் இருந்ததாகவும் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாததால் செயற்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துமாறு வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தினால் 2022 ஜூன் 22 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது ஆக்கபூர்வமான முறைமையிலும் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் செயற்படுத்த வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா 9.95 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட சிரீபுர பேருந்து நிறுத்துமிட நிர்மாண செயற்திட்டத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்ட வேண்டிய திகதி 2021 திசெம்பர் 22 ஆம் திகதி ஆக இருந்த போதும் கணக்காய்வினால் 2022 மார்ச் 10 ஆம் தேதி பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்படும் போதும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததால் தாமத கட்டணமாக ரூபா 343,759 தொகை இனங் காணப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை முழுமையாக்கியதன் பின்னர் சரியாக தாமத கட்டணங்கள் நிறுத்தி வைத்தல் தொகையிலிருந்து அறவிடுவதாக 2022 ஜூலை 7 ஆம் திகதி மாவட்ட செயலாளர் கணக்காய்வு வினாவிற்கான பதிலாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதுவரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் செயற்திட்ட தாமதம் இன்றி நிறைவேற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு முழுமையாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடு தாமதமாக கிடைத்த காரணத்தினால் இடம்பெற்ற தாமத கட்டணத்தை அறவிடுதல் நியாயமற்றது என குறிப்பிடப்பட்டிருந்தது. | உடன்படிக்கை பிரகாரம் தாமத கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்டத்தை நிறைவேற்றாமல் கைவிடுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராமிய வீதிகளி மற்றும் எஞ்சிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2021 இன் கீழ் திம்புலாகல பிரதேச செயலாக அதிகார பிரதேசத்தின் கிழக்கு அரலகன்விள கிராம சேவையாளர் பிரிவில் வீதியொன்று அச்சுக்கள் பரப்பி அபிவிருத்தி செய்யும் செயற் திட்டத்தை செயற்படுத்துவதற்காக ரூபா 1.97 மில்லியன் பெறுமதியான உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதும் குறித்த செயற்திட்டம் ரூபா 499,828 தொகை செலவழிக்கப்பட்ட ABC இடப்பட்டதன் பின்னர் கைவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி | 2024 கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்திற்கு உள்ளடக்கி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஹிங்குரக்கொட பேருந்து நிலையத்தின் மேல்மாடி நிர்மாண செயற்திட்டத்தின் நடவடிக்கை களின் பொலன்னருவையை கட்டியெழுப்புவோம் வட மத்திய புத்தாக அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் போது அரச பொறியியல் கூட்டுத்திாபனத்தின் ஆலோசனை கருத்தில் கொள்ளாமல் செயற்திட்ட உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்த காரணத்தினால் தொழில்நுட்ப தவறுகள் ஆங்காங்கே இருந்ததுடன் மேல்மாடி நிர்மாணத்தை பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக அதற்காக செலவிடப்பட்டு இருந்த ரூபா 11.17 மில்லியன் தொகை விளைவற்று காணப்பட்டது. | மாவட்ட பொறியியலாளர்களின் ஆலோசனையின் பிரகாரம் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்ததுடன் செயற் திட்டத்தை செயல்படுத்தும் காலப் பகுதியில் நாட்டில் காணப்பட்ட சீரற்ற நிலமை அடிப்படையில் செயற்திட்ட நிர்மாணம் தாமதமானதாகவும் மேல்மாடிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு வரையறைக்குள் குறித்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதாகவும் ஒட்டுமொத்த செயற்பாட்டை பூர்த்தி செய்வதற்கு மேலும் நிதி ஏற்பாடு தேவைப்படுவதாக | செயற்திட்டத்தை செயல்படுத்தும் போது சிக்கனம், செயற்திறன் மற்றும் வினைத்திறன் என்ற வகையிலும் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றக்கூடிய வகையிலும் செயற்படுத்த வேண்டும். |

### .3.4 செயற்திட்டத்தை நிறைவேற்றாமல் கைவிடுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலன்னருவ மாவட்ட செயலகத்தை நிர்மாணிப்பதற்காக 02 கட்டங்களின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 1,030.84 மில்லியன் செலவிடப்பட்டு இருந்தது செயற்திட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக இரண்டாம் கட்டத்திற்கு வழங்குநர் தெரிவு செய்தல் பெறுகை செயற்பாட்டிற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்த நிர்மாண காலம் 05 ஆண்டுகளால் தாமதமாகி இருந்தது. | இச்செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால மேற்கொள்ளப்பட்டதாகவும் இரண்டாம் கட்டம் 2020/2021 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட கொவிட் தொற்றினால் மந்த நிலையில் உள்ளதாக | செயற்திட்டத்தை செயல்படுத்தும் போது சிக்கனம், செயற்திறன் மற்றும் வினைத்திறன் என்ற வகையிலும் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றக்கூடிய வகையிலும் செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொலன்னருவையை கட்டியெழுப்புவோம் வட மத்திய புத்தாக அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ரூபா 1,303.86 மில்லியன் ஆன ஒப்பந்த பெறுமதிக்கு நிர்வாக கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக பொறியியல்சார் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு 2016 திசெம்பர் 15 ஆம் திகதி ஒப்பந்தம் அளிக்கப்பட்டு அச்செயற்திட்டம் 2018 திசெம்பர் 15 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை | 2018 திசெம்பர் 15 திகதி செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் அது 2021 செப்டம்பர் 30 ஆம் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டுள்ளதாகவும் நிதி இல்லாததன் பேரில் நிறுத்தப்பட்டு இருந்தது. | நிர்மாணத்தை பூர்த்தி செய்து ஆக்கபூர்வமான பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் கண்டிராத செயற்திட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விஜயபாபுர அலங்கார மீன் இன விருத்தி நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1.73 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் அத்தாங்கியில் நீர் கசிந்து வருவதால் மீன்களின் இனவிருத்தி செய்வது முடியாத இருந்ததால் செயற்றிட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | நிர்மாணிக்கப்பட்டுள்ள 09 தாங்கிகள் நீர் கசிவு காணப்படுவதாகவும் அலங்கார மீன்கள் இன விருத்திக்கு பொருத்தமான வகையில் தாங்கிகளை அகற்றி மேம்படுத்தப்படுவதற்கு நிதி ஏற்பாடு கோரி அனுப்பியுள்ளதாக | செயற்திட்டத்தை செயல்படுத்தும் போது சிக்கனம், செயற்திறன் மற்றும் வினைத்திறன் என்ற வகையிலும் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றக்கூடிய வகையிலும் செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2022 கிராமிய வாழ்வாதார அகோரித்து நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கோழிக்குஞ்சுகள் வழங்கும் செயற் திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10.84 பெறுமதியான 26,837 கோழிக்குஞ்சுகளில் ரூபா 8.78 மில்லியன் பெறுமதியான 21,731 கோழிக் குஞ்சுகள் மரணித்ததன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக வழங்குனரால் கோழிக்குஞ்சுகள் வழங்குவதற்கு உடன்படிக்கை | அவ்வாறு மரணித்த கோழிக் குஞ்சுகளுக்காக வழங்கப்பட வேண்டிய கோழிக் குஞ்சுகளை 2024 மே 31 ஆம் திகதி வரை 31 ஆம் திகதி அளவில் வழங்குமாறு அறிவிக்கப்பட்டு இருந்ததுடன் அத்திகதியில் கோழிக் குஞ்சுகள் வழங்குவதை தவிர்த்து இருந்ததால் உடன்படிக்கை பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |

செய்து இருந்த போதும் குறித்த கோழி குஞ்சுகளை 2024 மே மாதம் வரையில் வழங்கி இருக்கவில்லை.

### 3.6 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 முதல் 2020 காலப்பகுதியில் மத்திய பொறியியலாளர் மதியுரை பணியாகத்தினால் நிறைவேற்றப்பட்ட போதுமான குறைபாடுகள் காணப்பட்ட 15 செயல் திட்டங்களில் நிறுத்தி வைத்தல் தொகையாக ரூபா 141 மில்லியன் காணப்பட்டதுடன் தொடர்ச்சியாக வெற்றியளிக்காத மற்றும் குறைபாடுள்ள செயற்திட்டங்களை நிறைவேற்றும் இந்நிறுவனத்திற்க் செயற்திட்டங்களை வழங்குவதற்கு முன்னர் குறைபாடுகளை சரி செய்துகொள்ள அல்லது இந் நிறுவனத்தை கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்தவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் பிரதான பொறியியலாளருடன் கலந்துரையாடி தீர்மானிப்பதற்கு உள்ளதாக. | நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்கு இணங்க செயற்திட்டத்தை நிறைவேற்றி நிறுவனம் தொடர்பான உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தம்மன்கடுவ மற்றும் லங்காபுர பிரதேச பிரதேச செயலாளர்களின் பயன்படுத்தப்படுகின்ற 03 பவுசர்கள் ட்ராக்டர் வண்டி ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றும் மிதிவண்டி ஒன்று என்பன 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டன. | ஒரு பவுசர் லொரி வண்டியாக மாற்றப்படுவதற்கும் ஏனைய இரண்டு பவுசர்கள் நிதி ஏற்பாடு கிடைத்த பின்னர் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மோட்டார் சைக்கிளை கையேற்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | விளைவற்று காணப்படும் ஆவணங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |

### 3.8 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2000 - 2007 காலப்பகுதியில் உணவு திணைக்களத்தின் மூலம் அரிசி இருப்பு பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பொலன்னருவ உணவு களஞ்சியத்தில் லக் சதோசவிற்கு வழங்கப்பட்ட அரிசிக்காக ரூபா 22.31 மில்லியன் மற்றும் தேசத்தை கட்டி எழுப்புதல் மற்றும் தோட்ட அமைப்பு வசதிகள் அமைச்சுக்கு கையளிக்கப்பட்ட அரிசிக்காக ரூபா 19.82 மில்லியன் ஆக மொத்தம் ரூபாய் 42.13 மில்லியன் தொகை 20 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதும் தீர்வு செய்யப்படாமல் சேதங்கள் மற்றும் நட்டங்கள் கூற்றில் தொடர்ந்தும் பதிவு அளிப்பதற்க்கு உள்ள மீதி ஒன்றாக காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த மீதிகள் மேற்படி இரண்டு நிறுவனங்களின் நிதி கூற்றுக்களில் பொலன்னருவ மாவட்ட செயலாளருக்கு செலுத்த வேண்டிய மீதி ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்வில்லையென்பது உறுதிப்படுத்தப்பட்டது. | 7000-0-0-25003-418 முற்பண கணக்கின் கீழ் 2007 ஜனவரி 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதியான ரூபா 2,076.33 மில்லியனில் இதுவரை ரூபா 42.13 மில்லியன் அறவிடுவதற்கு உள்ளதாக | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண |

### 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) எலஹர தமன்கடுவ மெதிரிகிரிய, லங்காபுர வெலிகந்த மற்றும் திம்புலாக்கல ஆகிய 07 பிரதேச செயலகங்களில் அமைந்துள்ள கிராம சக்தி மக்கள் சங்கங்களின் எண்ணிக்கை 85 இற்கு இடையே 61 சங்கங்கள் செயலற்ற மட்டத்தில் காணப்படுவதுடன் அச்சங்கங்களுக்கு உரிய கணக்கில் 2023 டிசம்பர் 31ல் உள்ளவாறு ரூபா 16.37 மில்லியன் தொகை விளைவற்று காணப்பட்டது. | நிதிய கணக்குகளில் காணப்படும் பணத்தை செயற்பாட்டு மட்டத்தில் உள்ள சங்கங்களுக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | கிராம சக்தி மக்கள் செயற்திட்டத்தின் நோக்கங்களை செயற்திறனாக நிறைவேற்றும் வகையில் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) எலஹர, மெதிரிகிரிய, லங்காபுர மற்றும் ஹிங்குரக்கொட ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய அரச நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலைகள் மற்றும் விஹாரைகள் அமைந்துள்ள 511 | அரச நிறுவனங்களுக்கு கையளிப்பு உறுதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக | கையளிப்பு உறுதிகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| காணிகளில் மீளாய்வாண்டின் இறுதிவரை காணி கையளிப்பு 122 நிறுவனங்களுக்கு மாத்திரம் உறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. | | எடுத்தல் வேண்டும். |

**4. மனித வள முகாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச 07 பிரதேச செயலகங்களில் பதவியணியினர் தொடர்பான தகவல்களின் பிரகாரம் 06 சிரேஷ்ட மட்ட பதவிகளில் 10 மூன்றாம் மட்டத்தில் 04 பதவிகளில் 16 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்தில் 07 பதவிகளில் 161 வெற்றடங்களும் ஆரம்ப மட்டத்தில் 02 பதவிகளில் 02 வெற்றிடங்களாக 189 வெற்றிடங்களை காணப்பட்ட ன. | வெற்றிடகள் தொடர்பான தகவல்கள் பொது நிர்வாக PACTS முறைமை ஊடாக நாளதுவரையாக்கப்பட்டுள்ள தாக | வெற்றிடங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |